DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 185/2024 |
| Deposition of Witness for | : | P.W. 4 |
| Name | : | **தேவி** |
| Father's Name | : | **துரைராஜ்** |
| Village | : | **புல்லாம்பட்டி** |
| Taluk | : | **சிங்கம்புணரி** |
| Calling | : | **விவசாயம்** |
| Age | : | **23/2025** |

**(வழக்கின் 2-ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி ஆஜர் இல்லை. 1ம் எதிரி சார்பில் Cr.P.C பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 19.06.2025

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது புல்லாம்பட்டியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா 1, 2 என் பெற்றோர்கள். அ.சா 3 என் அண்ணன். எதிரிகள் இருவரும் என் சித்தப்பாக்கள். 13.05.2020 ம் தேதி மதியம் சுமார் 3.30 மணியளவில் நான் வீட்டில் இருந்த போது என் அப்பாவும், என் மாமா ராஜ்குமார் என்பவரும் மோட்டார் சைக்கிளில் குளத்துப்பட்டியில் இருந்து வரும்போது மாதங்கருப்பர் கோவிலுக்கு அருகே எதிரிகள் இருவரும் என் அப்பா துரை ( எ ) துரைராஜ் - ஐ அரிவாளை கொண்டு தலை, கழுத்து, தோள்பட்டை ஆகிய இடங்களில் அரிவாளால் வெட்டிவிட்டதாக என் மாமா ராஜ்குமார் பதற்றத்துடன் ஓடி வந்து என்னிடம் சொன்னார். என் மாமா வீட்டிற்கு வந்து என்னிடம் சொன்னவுடன் எதிரிகள்

இருவரும் உடனே எங்கள் வீட்டிற்கு வந்தார்கள். என் அம்மாச்சி ஆண்டிச்சியையும், என்னையும் எதிரிகள் இருவரும் கெட்ட வார்த்தைகளால் திட்டினார்கள். அதன் பிறகு என் அம்மா முத்துலெட்சுமியை எதிரி கருப்பையா இரும்பு பைப்பை கொண்டு வலது தோள்பட்டை, கழுத்தில் அடித்து ரத்த காயத்தை ஏற்படுத்தினார். எதிரி முருகேசன் கட்டையால் என் அம்மாவின் வலது தொடையில் அடித்து காயப்படுத்தினார். எதிரிகள் இருவரும் போகும் போது என் அம்மாவைப் பார்த்து உன் கணவரை மாதங்ககருப்பர் கோவிலுக்கு அருகில் வெட்டிப்போட்டுவிட்டதாகச் சொன்னார்கள். சம்பவத்தில் எனக்கு எதுவும் காயங்கள் ஏற்படவில்லை. எதிரி கருப்பையா எதிரி முருகேசனை அவரவர்களுக்கு உள்ளேயே கட்டையால் தாக்கிகொண்டார்கள். அதில் முருகேசனுக்கு தலையில் காயம் ஏற்பட்டது. அதன் பிறகு என் அண்ணன் முருகன் மற்றும் என் மாமா ராஜ்குமார் ஆகியோர் காயம்பட்ட என் அப்பாவை மாதங்கருப்பர் கோவில் இருந்து சிகிச்சைக்காக முதலில் துவரங்குறிச்சி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று பின்னர் மேல் சிகிச்சைக்காக திருச்சியில் உள்ள அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எங்கள் குடும்பத்தினருக்கும், எதிரிகள் தரப்பினர்களுக்கும் சொத்து சம்பந்தமாக ஏற்கனவே பிரச்சினை இருந்து வருகிறது. என் அப்பா என் சித்தப்பாவிற்கு உரிய சொத்தை பிரித்து கொடுக்கவில்லை என்று என் ஐயா போலிசில் புகார் கொடுத்து இருந்தார். இன்று வரையில் சொத்து பிரிபடாமல் எங்களிடம் மொத்தமாக உள்ளது என்றால் சரிதான். பொதுவாக உள்ள கிணற்றில் உள்ள பைப்புகளை என் அப்பாவும் என் அண்ணனும் வெட்டிவிட்டார்கள் என்றால் சரிதான். எதிரிகள் தண்ணீர் பாய்ச்சக் கூடாது என்பதற்காக வெட்டினார்கள். மேற்படி சொத்துக்களை பிரித்துக்கொடுக்கும் படி எங்கள் ஊரில் 10 முறை பஞ்சாயத்து நடைபெற்று இருக்கும் என்றால் சரிதான். என் அப்பா சொத்துக்களை எதிரிகளுக்கு கொடுக்கக் கூடாது என்று சொல்லிவிட்டார். என் அப்பாவை எதிரிகள் எப்படி தாக்கினார்கள் என்பது பற்றி எனக்கு நேரடியாகத் தெரியும் என்றால் தெரியாது. எனது வீட்டின் அருகே

தான் முருகேசன், கருப்பையாவின் வீடுகள் உள்ளன என்றால் சரிதான். மேற்படி சொத்து பிரிபடாமல் உள்ளதால் எதிரிகள் வீட்டை காலி செய்து விட்டு தற்போது வெளியூரில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். நான் சொல்வது போல் எதிரிகள் என் அப்பாவை வெட்டவில்லை என்றும் கிணற்றில் உள்ள பைப்பை வெட்டும் போது தவறி விழுந்து கீழே உள்ள கம்பிகள் தாக்கி காயங்கள் ஏற்பட்டது எற்றால் சரியல்ல. என் அம்மா தான் முருகேசனின் தலையில் தாக்கினார் என்றால் சரியல்ல. எதிரிகள் எங்கள் வீட்டிற்கு வந்து அசிங்கமாக பேசி என் அம்மாவை தாக்கினார்கள் என்றால் சரியல்ல. சம்பவ சமயத்தில் எனக்கு வயது 17 இருக்கும். போலிசார் இந்த வழக்கு சம்பந்தமாக என்னை என் வீட்டில் வைத்து விசாரித்தார்கள். நான் சொல்வது போல் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றும் என் சித்தப்பாவிற்கு சொத்து கொடுக்கக்கூடாது என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் என் அப்பாவிடம் பாக உரிமை கோரி நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

-Sd-

**Chief Judicial Magistrate,**

**Sivagangai.**